இயக்குநர், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, அவர்களின் செயல்முறைகள்
முன்னிலை : திரு. மு. மனோகரன், எம்.எஸ்.சி., பி.எட்.,
இயக்குநர், (மு.கூ.பொ)

அலுவலக நடப்பாணை எண். 550 / ம.செ.ஆ.து / அ3 / 2020, நாள் : 26.11.2021

பொருள்: பணியாளரமைப்பு – மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை – தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்கள் பணித் தொகுதி – திரு. இரா. முகேஷ்குமார், இளநிலை உதவியாளர் ( பிறந்த தேதி 19.06.1994) – பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் துவங்குதல் – ஆணை பிறப்பித்தல் – தொடர்பாக.

பார்வை: 1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை, கடித எண்.2368 / PSD–I / 2020, நாள் 26.05.2020

2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். 550 / மசெஆது / அ3 / 2020, நாள் 23.07.2020

&&&&&&

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் 2018–19 மற்றும் 2019–20 ஆண்டுகளுக்கான ஒருங்கிணைந்த குடியியல் பணித் தேர்வு தொகுதி – IVல் அடங்கிய இளநிலை உதவியாளர் பதவிக்கு, தெரிவு செய்யப்பட்டு இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதினைத் தொடர்ந்தும் பார்வை 2ல் உள்ள இவ்வலுவலக செயல்முறையில் வழங்கப்பட்ட பணி நியமன ஆணைக்கிணங்கவும் திரு இரா.முகேஷ்குமார் இளநிலை உதவியாளராக 07.08.2020 முற்பகல் அன்று பணியில் சேர்ந்துள்ளார்.

தனியரது இளநிலை உதவியாளர் பதவியின் பணி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் ( பணி நிபந்தனைகள் ) சட்டம், 2016–இன் கீழுள்ள பிரிவு 28(1)–இன்படியும் தமிழ்நாடு அமைச்சுப் பணியாளர்கள் பணி விதிகளின் விதி எண்கள் 32 மற்றும் 34 ஆகியவற்றின் கீழும் அப்பதவியில் பணியில் சேர்ந்த நாளான 07.08.2020 முற்பகல் முதல் வரன்முறை செய்யப்பட்டு தகுதிகாண் பருவம் துவங்கி ஆணை பிறப்பிக்கப்படுகிறது. தனியர் ஈராண்டு கால தகுதிகாண் பருவ காலத்தை மூன்றாண்டு தொடர் பணி காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் தனியர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் பவானிசாகர் குடியியல் பணி அடிப்படை பயிற்சியினை முடிக்கப்பட வேண்டுமெனவும் அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வு தேர்ச்சிப் பெற வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறார்.

மேலும் இப்பணி வரன்முறை ஆணை இளநிலை உதவியாளர் பதவி பணி நியமனம் தொடர்பாக மெட்ராஸ் உயர்நீதி மன்றம், மெட்ராஸ் / மதுரை ஆகியவற்றில் தொடுக்கப்பட்ட வழக்குகளுக்கு வழங்கப் படவுள்ள தீர்ப்பின் நிபந்தனைக்குட்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

29/11/2021

இயக்குநர் (மு.கூ.பொ)க்காக

பெறுநர்
திரு. இரா.முகேஷ்குமார்,
இளநிலை உதவியாளர்,
ம.செ.ஆ.துறை, சென்னை – 600 108.
நகல் கோப்பு